தொகுதி ௨
சித்திரம் ௫

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்

# சினம் கொண்ட சின்னவர்





© 2012 Ponnivala Publishing







மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ
கசாண்ட்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.

தொகுதி 2 சித்திரம்-05


## சினம் கொண்ட சின்னவர்


பொன்னிவள நாட்டு சகோதரர்கள், தம்முடைய பெற்றோர்களுக்கு, பங்காளிகள் இழைத்த கொடுமைளுக்கு பழி வாங்க தங்கவள நாட்டுக்கு சென்று அவர்களை நாட்டை விட்டே துரத்தினர். நயவஞ்சக பங்காளிகள் சோழ மன்னனிடம் நடந்ததை கூறி தஞ்சம் அடைந்தனர். அத்தோடு, பொன்னிவள நாட்டு சகோதரர்கள், சோழமன்னனுக்கு கப்பம் கட்டாமல் ஏமாற்றி வருவதாக புகார் செய்தனர்.







சதிகார பங்காளிகள் என் பெற்றோரை பொன்னிவள நாட்டை விட்டு அடித்து துரத்தி ஐந்து வருடங்கள் கஷ்டப்பட விட்டனர்.
என் பெற்றோர்கள் கூறியது போல் பழைய பிரச்சனைகளுக்காக அவர்களைப் பழி வாங்கக்கூடாது என்று அண்ணன் சொல்கிறார்.
இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. பங்காளிகளே! உங்களை ஒருகை பார்க்க நாங்கள் வந்து கொண்டு இருக்கிறோம்.



ங்ஈஈஈஈ...
டக்கட... டக்கட...
சகோதரர்கள் இருவரும் பெற்றவர்களை துன்புறுத்திய பங்காளிகளை பழி வாங்க தங்களின் குதிரைகளில் மின்னல் வேகத்தில் சென்று தங்கவள நாட்டை அடைந்தனர்.
ஆ..! என்ன சத்தம் அது?
குதிரைகள் நிலம் அதிர ஓடி வந்ததில் தங்கவள நாட்டு மக்கள் இடிஇடிப்பதைப்போல் உணர்ந்தனர்.
சாம்புகா!
குதிரைகளை கட்டிவிட்டு ஊரில் உள்ள பாடசாலைக்கு வந்து சேர்.



இரு சகோதரர்களும் பாடசாலையை நோக்கிச் செல்ல, சாம்புகன் குதிரைகளை கட்டி விட்டு ஊரில் உள்ளவர்களுக்கு தெரியாமல் மறைந்து கொண்டு பாடசாலை இருக்கும் திசையில் நடந்து சென்றான்.
வரப்போகும் ஆபத்து அறியாததால், பாடசாலை வழமை போல நடந்து கொண்டு இருந்தது.


சகோதர்கள் இருவரும் உள்ளே சென்றனர்.
யார் நீங்கள்?
உங்களுக்கு என்ன வேண்டும்? எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?
அங்கிருந்த ஒரு சிறுவன் எழுதுகோலை எடுத்து வீசினான். அது சங்கரை தாக்கி, கோபப்படுத்தியது.
நம் பள்ளியில் அனுமதியின்றி நுழைந்த இவர்களை நாம் அடித்து துரத்த வேண்டும்.
ம்... ம்...



சாம்புகா!
சாமி! சின்னவரின் குரல் போல் இருக்கிறதே!
குழந்தைகளே ஓடுங்கள்!
விரைவாக ஓடுங்கள்!
ஆசிரியர்களும் மாணவர்களும் பயத்தில் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். அப்போது ஒரு ஆசிரியர் சாம்புகன் மேல் மோதி கீழே விழுந்தார்.
ஆ...!
சாம்புகன் பாடசாலையின் கூரையை உடைத்துக் கொண்டு கீழே குதித்தான்.


சாம்புகா! கதவைச் சாத்திவிட்டு இந்தப் பிள்ளைகளை சாட்டையால் அடி!
சாம்புகனிடம் சாட்டையடிபட்ட சிறுவர்கள் வலி தாங்க முடியாமல் அழுது புலம்பினர்.
படார்...
எதற்காக அடிக்கிறீர்கள்?
அடிக்காதீர்கள்! நிறுத்துங்கள்! வலி தாங்க முடியவில்லை!
நிறுத்துங்கள்! அடிக்காதீர்கள்!
நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறோம்.



சிறுவர்களே! உங்கள் பெற்றோர்கள் எங்கள் தாய் தந்தையரை..
சொந்த நாட்டில் இருந்து சொத்துக்களை பிடுங்கிக் கொண்டு அடித்து துரத்தி விட்டனர்.
ஐந்து வருடங்களாக அவர்கள் பட்ட கஷ்டங்களை சொல்லிமளாது.
அதற்கு பழி வாங்க தான் நாங்கள் இங்கே வந்துள்ளோம்.
சாம்புகா! இவர்களை தோப்புக் கரணம் போட வை.
பின் இருவராக இணைத்துக் கட்டி வீதியில் விரட்டி விடு.
ம்ம்ம்ம்ம்ம்
ம்ம்ம்ம்ம்ம்
சாம்புகன் அதே போல் செய்தான்.




சாம்புகன் சிறுவர்களை இருவராக இணைத்து கட்டி வீதியில் தள்ளினான். அவர்கள் புழுதியில் விழுந்து உருண்டு புரண்டனர். சாம்புகன் பள்ளிக்கூடத்தை அழிக்கத் தொடங்கினான்.


அம்மா... ஊஊஊ...
இந்த பிள்ளைகள் சண்டை போடாமல் வீட்டிற்கு வரமாட்டார்களா?
சிறுவர்கள் துள்ளித் துள்ளி வந்தனர். அதைக் கண்ட தாய்மார்கள் அவர்கள் சண்டையிட்டுக் கொண்டு வருவதாக தவறாகப் புரிந்து கொண்டனர்.
அடக் கடவுளே!
யார் இப்படி செய்தது?
ஆசானும் எங்களை தனியே விட்டு ஓடி விட்டார்.
பள்ளிக் கூடத்திற்கு வந்த மூன்று பேர் தான் இப்படிச் செய்தார்கள்.
நாங்கள் அவர்களை அடிக்க தயாரானோம்.
அவர்கள் சேவகனை விட்டு எங்களை சாட்டையால் அடித்தனர்.
அத்தோடு தோப்புக் கரணம் போடச் சொல்லி பின் கயிற்றால் இணைத்து கட்டி...
வீதியில் தள்ளிவிட்டனர்.
எந்த பாதகர்கள்! இப்படிச் செய்தது?


பள்ளிக்கூடத்திற்கு மூன்று பேர்கள் வந்தார்களாம்.
பெண்ணே! என்ன நடந்தது?
அவர்கள் நம் பிள்ளைகளை அடித்து கயிற்றால் கட்டி வீதியில் தள்ளியுள்ளனர்.
நாங்கள் சென்று யார் என்று பார்த்து வருகிறோம்.
அனைவரும் கம்புகளை எடுத்துக் கொள்ளுங்கள்.
தங்கவள நாட்டில் உள்ள அனைத்து ஆண்களும் பள்ளிக்கூடத்திற்கு கையில் கம்புடன் சென்றனர்.


பங்காளிகள் வருகிறார்கள்.
மகாவிஷ்ணுவே! பங்காளிகளுடன் சண்டையிட்டு வெற்றி பெற துணையிருந்து வரம் அருள வேண்டும்.
சங்கருக்கு நான் சென்று உதவ வேண்டும்.
சங்கருக்கு உதவ விஷ்ணு தன் கருட வாகனம் ஏறி பூமிக்கு விரைந்து வந்து ஈயாக மாறினார். தன் சக்தியை வழங்குவதற்காக சங்கரின் வாளின் மேல் இருந்து விட்டு பின் கூரையின் மேல் போய் அமர்ந்து கொண்டார்.




பங்காளிகள் உள்ளே வந்ததும் சாம்புகன் அவர்களை சாட்டையால் அடித்தான். வலி தாங்க முடியாமல் அலறித் துடித்தனர்.
படார்...
படார்...
அடிக்காதீர்கள்! வலிக்கிறது! எதற்காக எங்களை அடிக்கிறீர்கள்?
எங்கள் பெற்றோரை சொத்தையெல்லாம் பிடுங்கிக் கொண்டு சொந்த நாட்டை விட்டு துரத்தியடித்து, நாங்கள் பிறப்பதற்கு முன்பே எங்களைக் கொல்ல சதி செய்தீர்களே..
அதற்குத் தண்டனையாக நாங்கள் உங்களை இங்கிருந்து அடித்து விரட்டப் போகிறோம்.
பெண்களே! உடனே சென்று நம் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். நாம் இங்கிருந்து செல்ல வேண்டும்.
ஏன்..? என்ன நடந்தது?
உங்களால் அவர்களை வெல்ல முடியவில்லையா?
உங்களுக்கு வெட்கமாக இல்லை?


உனக்கு என்ன தெரியும்?
அவர்களிடம் அடிபட்டிருந்தால் நீ இப்படி கேட்க்க மாட்டாய்.
நம்மால் தூக்க முடிந்த அளவுக்கு பொருட்களை எடுத்துக் கொள்வோம்.
தங்கவள நாட்டில் இருந்த அனைவரும் தங்களால் இயன்ற அளவு பொருட்களை எடுத்துக் கொண்டு விநாயகர் கோவிலுக்குச் சென்றனர்.


நம்மை செந்த நாட்டை விட்டு துரத்தி விட்டார்கள்.
இந்த நாடு சோழ மன்னரின் முன்னோர்களால் நமக்கு தானமாக கொடுக்கப்பட்டது. இப்போது நாம் சென்று அவரிடம் வாழ புதிய இடம் ஒன்றை கோட்போம்.
அனைவரும் பொருட்களை வண்டிகளில் ஏற்றுங்கள். புறப்படுவோம்.
அனைவரும் வண்டிகளில் உடைமைகளை ஏற்றிக் கொண்டு சோழ மன்னனை காண புறப்பட்டனர்.


தங்கவள நாட்டு மக்கள் கடும் வெயிலில் கரடு முரடான பாதைகளில் நடந்தும் வண்டிகளிலும் சென்றனர். குடிக்க தண்ணீரோ, ஓய்வெடுக்க மரநிழலோ எங்கும் இருக்கவில்லை.
கஷ்டமான நீண்டதூர பயணத்தின் முடிவில் அவர்கள் சோழதேசத்தை அடைந்தனர். சோழ மன்னர் நிச்சயம் உதவுவார் என்ற நம்பிக்கையுடன் சென்றனர்.


சோழ தேசத்தின் விநாயகர் கோவிலில்...
இங்கே தங்கி ஓய்வெடுத்துக் கொள்வோம்!
நாங்கள் நால்வரும் சென்று சோழ மன்னரை பார்த்து வருகிறோம்.
நடந்து வந்த களைப்பால் அனைவரையும் கோயிலில் ஓய்வெடுக்கச் செல்லி விட்டு, மூன்று பங்காளிகள் மட்டும் சோழ மன்னனை காண புறப்பட்டுச் சென்றனர்.


பங்காளிகள் சோழ மன்னரின் அரண்மனையை அடைந்து உள்ளே செல்ல முற்பட்டனர். ஆனால் காவலன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான்.
நில்லுங்கள்!
என்ன காரியமாக இங்கே வந்தீர்கள்?
நாங்கள் தங்கவள நாட்டில் இருந்து வருகிறோம்.
எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அது விடையமாக மன்னரை பர்த்து பேச வந்துள்ளோம்.
ஆகட்டும்! மன்னர் அவைக்கு வரும் நேரமிது. நான் சென்று உங்களைப் பற்றி அவரிடம் கூறி..
உத்தரவு கிடைத்ததும் அழைத்துச் செல்கிறேன்.





பங்காளிகள் நால்வரும் சோழ மன்னரை காண உத்தரவு பெற்று அரண்மனைக்குள் சென்று காத்திருந்தனர். மன்னர் அவைக்கு வந்ததும் எழுந்து நின்று தங்கள் மரியாதையை செலுத்தினர். மன்னர் பங்காளிகளைப் பார்த்து...






பங்காளிகள் சோழ மன்னரிடம், அப்பாவிகளான தங்களை குன்னுடையானின் மகன்கள் அடித்து துன்புறுத்தி நாட்டைவிட்டு துரத்திவிட்டதாக கூறி நம்ப வைக்க முயன்றனர். ஆனால், சோழ மன்னர் அவர்கள் செய்த அநியாயங்கள் அனைத்தும் அறிந்திருந்தார்.






அதற்கு நான் என்ன செய்ய முடியும் ?
மன்னா! நீங்கள் கூறியது உண்மை தான்.
ஆனால், குன்னுடையாக் கவுண்டர் இறந்த பிறகு அவர்களின் மகன்கள் உங்களுக்கு வரியே செலுத்துவதில்லை தெரியுமா?
அத்தோடு உங்களை மதிப்பதுமில்லை.
என்ன? அப்படியா!
பங்காளிகள் தங்களுடைய சாதுரியமான பேச்சால் மன்னரை தம்பக்கம் வளைத்தனர்.
நாங்கள் வரியை தவறாமல் செலுத்தி வருகிறோம்.
ஆனால், அந்த இருமுரடர்களும் இதுவரை வரியே செலுத்தவில்லை.


இது உண்மையா?
கணக்காளரை அழைத்து வாருங்கள்.
பங்காளிகள் கூறிய செய்தியின் உண்மையை அறிய விரும்பிய மன்னர் அரண்மனையின் கணக்காளரை அழைத்தார்.
கணக்கரே!
குன்னுடையா கவுண்டரின் மகன்களான பொன்னரும், சங்கரும் தவறாமல் வரி செலுத்துகிறார்களா என்று பார்.
சரி மன்னா!
அரசே! அவர்களின் பெற்றோர்கள் இறந்த பிறகு நமக்கு வரியே செலுத்த வில்லை.



கவுண்டர்களே! இங்கேயே தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
நான் திமிர் பிடித்த அந்த இருவரிடமும் வரி வசூலித்து வரும்படி ஆட்களை இப்பொழுதே அனுப்புகிறேன்.
அத்தோடு, பொன்னிவள நாட்டையும் உங்களுக்கே வாங்கிக் கொடுக்கின்றேன்.
மிக்க நன்றி மன்னா!
நாங்கள் இங்கே பாதுகாப்பாக இருப்போம்.
யார் அங்கே! பொன்னிவள நாட்டுக்கு உடனே சென்று...
அந்நாட்டை ஆள்பவர்கள் எனக்கு கப்பமாக...
தயிர் களையம், தங்க வள்ளம் மற்றும் உழவுக் கலப்பையை செலுத்த வேண்டும் என்ற என் உத்தரவை போய்க் கூறு.
இதை கொடுக்கத் தவறும் பட்சத்தில் அபராதம் விதித்து சிறையில் தள்ளப்படுவார்கள் என்று எச்சரிக்கை செய்.
சரி மன்னா! இப்பொழுதே செல்கிறோம்.



சேவகர்கள் விடை பெற்றுச் சென்றதும் பங்காளிகள் தமக்குள்ளே சிரித்துக் கொண்டனர்.
அவர்கள் எங்கே செல்கிறார்கள்?
பொன்னிவள நாடு இங்கிருந்து அதிக தூரமா?
இல்லை, பொழுது சாய்வதற்குள் நாம் அங்கே சென்று விடலாம்.


சேவகர்கள் விரைவில் பென்னிவள நாட்டை அடைந்தனர். அங்கே வீதியின் அருகில் நின்ற இரண்டு காளை மாடுகள் அவர்களை பார்த்து தமக்குள் பேசிக்கொண்டனர்.
ம்ம்ம்ஸ்ஸ்ஸ்...
ஏய்! யாரோ வெளியூர்க்காரர்கள் வருகிறார்கள்!
ஆமாம்! அவர்களை நான் இதற்கு முன் இங்கே பார்த்ததில்லையே.
வா! அவர்களை இங்கிருந்து விரட்டலாம்.
காளைகள் இரண்டும் சோழமன்னரின் சேவகர்களைத் முட்டி கீழே தள்ளியது.
ஏய்! நில்லுங்கள் அவர்களை விட்டு விடுங்கள்!
மாடு மேய்ப்பவர் காளை மாடுளைத் தடுத்து நிறுத்தினார்.


யார் நீங்கள்?, எதற்காக இங்கே வந்தீர்கள்?
ஐயா! நாங்கள் சோழமன்னரின் சேவகர்கள். மன்னரின் உத்தரவின் பேரில் குன்னுடையாக் கவுண்டரின் மகன்களை தேடி இங்கே வந்தோம்.
ஏய்! உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் எங்கள் அரசர்களை குன்னுடையாக் கவுண்டரின் மகன்கள் என்று சாதாரணமாக சொல்வீர்கள்?
இதை மட்டும் அவர்கள் கேட்டிருந்தால், இந்நேரம் உங்கள் தலைகள் உடம்பில் இருந்திருக்காது .
ஐயா! நாங்கள் தவறாக பேசியதற்கு மன்னியுங்கள்.
தயவு செய்து மாடுகளை கொஞ்சம் பிடித்துக் கொள்ளப்பா. நாங்கள் அரசரை காண அரண்மனைக்கு செல்ல வேண்டும்.


குக்கூ...குக்கூ...
அரண்மனையின் பணிப்பெண் குப்பி அருகில் இருந்த ஆற்றிற்கு தண்ணீர் எடுக்க பொன்னாச்சியுடன் வந்தாள். அப்பொழுது அவ்வழியே வந்த சோழமன்னரின் சேவகர்களை கண்ட பொன்னாச்சி கோபங் கொண்டு அவர்களின் காலில் கடித்தது.
உர்ர்ர்ர்...
யாரோ வெளியூர்க்காரர்கள்!


பொன்னாச்சி! நில்! அவர்களை ஒன்றும் செய்யாதே.
யார் நீங்கள்? எங்கே வந்தீர்கள்?
தாயே! நாங்கள் சோழ மன்னரின் சேவகர்கள்.
மன்னரின் உத்தரவை குன்னுடையாக் கவுண்டரின் மகன்களுக்கு எடுத்து செல்லும் எங்களை இந்த காதில்லா மூளி நாய் கடித்து விட்டது.
கவனம்!! இன்னொரு முறை காதில்லா நாய் என்று சொன்னால் இங்கிருந்து உயிருடன் திரும்ப மாட்டீர்கள்.
அத்தோடு குன்னுடையாக் கவுண்டரின் மகன்கள் என்று சொல்ல வேண்டாம். மன்னர் என்று கூறுங்கள். இல்லையேல், உங்கள் உயிருக்கு உத்தரவாதம் தர முடியாது.
அடக்கடவுளே! இதுவரை நாங்கள் பட்ட துன்பங்களே போதும், இதற்கு மேலும் அரண்மனைக்கு சென்று கஷ்டப்பட விரும்பவில்லை.



தயவு செய்து நாங்கள் கொண்டு வந்த உத்தரவை கூறுகிறோம்.
அதை உங்கள் மன்னரிடம் சேர்த்து விடுங்கள்.
பொன்னிவள நாட்டு மன்னரின் இறப்பிற்கு பின் அவரின் மகன்கள் சோழ மன்னருக்கு இதுவரை கப்பம் செலுத்தவில்லை. அதனால் சோழ மன்னர் மிகவும் கோபமாக இருக்கிறார்.
நாளைக்குள் கப்பம் செலுத்தா விட்டால், அபராதம் விதித்து, சிறையிலும் அடைத்து தண்டிப்பார்.
அடக்கடவுளே! இதை இப்பவே அவர்களிடம் சொல்கிறேன்.
அவர்கள் சோழ மன்னரின் உத்தரவை கூறி விட்டு புறப்பட்டனர்.
பணிப்பெண் தண்ணீர் எடுத்துக் கொண்டு வேகமாக அரண்மனைக்குச் சென்றாள்.




குப்பி தண்ணீர் குடத்துடன் அரண்மனைக்குள் சென்று பதற்றத்துடன் குடத்தை இறக்கி வைப்பதைக் கண்ட தங்காள் “என்ன நடந்தது” என்று கேட்டாள்.




குப்பி சகோதரர்கள் இருவரும் தாயம் விளையாடிக் கொண்டிருந்த அறைக்கு விரைந்து சென்றாள்.
என்ன குப்பி? ஏதும் முக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறாயா?
உங்களை தங்கை உடனடியாகப் பார்க்க வேண்டுமாம்.
சங்கர் ஏதோ தவறு நடந்திருக்கிறது என எண்ணி தங்கையை பார்க்க உடனே சென்றார்.
எதற்காக அம்மா அழைத்தாய்?
அண்ணா! சோழ மன்னருக்கு நீங்கள் இது வரை காலமும் கப்பம் கட்ட வில்லையல்லவா? அதனால் கட்ட செல்லி செய்தி அனுப்பியுள்ளார்.
இந்த நாடு நம்முடைய நிலபுலன்கள் அனைத்தும் அவருடையதே.
தயவு செய்து தயிர்களையம், தங்கவள்ளம், உழவுக் கலப்பையை கப்பமாக கட்டி விடுங்கள்.
சோழ மன்னர் கேட்பதை எல்லாம் கொடுக்க முடியாது!



அத்தோடு கப்பம் செலுத்தி அடிமை போல் வாழ என்னால் முடியாது.
அழாதே தங்காள்!
நான் சென்று கப்பத்தை செலுத்தி வருகிறேன்.
சங்கர் கப்பம் கட்ட மறுத்ததால் தங்காள் அழத் தொடங்கினாள். அதை கேட்ட பொன்னர் அங்கே வந்தார்.
நல்லது அண்ணா! நீயே சென்று கட்டி விட்டு வா.
சோழ மன்னர் ஏன் இன்று வரை கப்பம் செலுத்த வில்லை என்று கேட்டால், அதைப் பற்றிய விபரங்கள் தெரியாது என்று கூறு.
மேலும் ஏதேனும் இடையூறுகள் வந்தால் சமாளிப்பதற்கு சாம்புகனை உன்னுடன் அனுப்புகிறேன்.
பொன்னிவள நாட்டின் கப்பத்தை பொன்னர் சோழமன்னருக்கு எடுத்து சென்றார்.


சாம்புகா! நாம் விரைவாக சோழ மன்னர் அரண்மனைக்கு செல்ல வேண்டும்.
சரி சாமி!
இதை பிடியுங்கள். மற்றவைகளை நான் எடுத்து வருகிறேன்.
சங்கர் கோபம் கொண்டு பங்காளிகளை நாட்டை விட்டு துரத்தினார். அதனால் பங்காளிகள் அவர்களைப் பழி வாங்கும் நோக்கத்தில் சோழமன்னரை தூண்டி விட்டு அவர்களிடம் கப்பம் கேட்க வைத்து மீண்டும் பிரச்சனையை தொடங்கி விட்டனர். தற்போது பொன்னர் கப்பத்துடன் சோழ மன்னரை காண செல்கிறார். பொன்னர் கொண்டு செல்லும் கப்பத்தை மன்னர் ஏற்றுக் கொள்வாரா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic18tamil


வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு



சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!








01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியின் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது


## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com


ISBN 978-1-927093-59-7



© 2012 Ponnivala Publishing